# குழந்தைகள் மற்றும் இளவயது நபர்களுக்கான சேவைகள் (CYP) அந்தரங்கம் பேணலுக்கான அறிவிப்பு

குழந்தைகள் மற்றும் இளவயது நபர்களுக்கான சேவைகள் (CYP), என்ன தகவல்களை சேகரிக்கிறது மற்றும் பயன்படுத்துகிறது மற்றும் உங்களது தகவல் குறித்த உங்களது உரிமைகள் என்னவென்று இந்த அந்தரங்கம் பேணலுக்கான அறிவிப்பு என்னவென்று உங்களுக்கு தெரிவிக்கிறது.

## 1. பொது தகவல்

குழந்தைகள் மற்றும் இளவயது நபர்களுக்கான சேவைகள் (CYP), சஃபோக்கிலுள்ள குழந்தைகள் மற்றும் இளவயது நபர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு பொறுப்புள்ள அமைப்பாகும்; கல்வி, திறன்கள், இளையோருக்கான நீதி மற்றும் ஆரம்ப ஆண்டு சேவைகள் தொடர்பாக தொடக்கநிலை உதவி, சமூகப் பராமரிப்பு மற்றும் சேவைகளை இது உள்ளடக்கும். இக்கடமைகளைப் பூர்த்தி செய்வதற்காக சில தருணங்களில் தனிப்பட்ட தரவை நாங்கள் சேகரிப்பதும், பயன்படுத்துவதும் தேவைப்படலாம்.

தரவு பாதுகாப்பு சட்டம் என்று சேர்த்து ஒட்டுமொத்தமாக குறிப்பிடப்படுகின்ற யுகே பொது தரவு பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் (UK GDPR) மற்றும் தரவு பாதுகாப்பு சட்டம் 2018 (DPA 2018) ஆகியவற்றால் தனிப்பட்ட தரவின் கையாளல் (புராசஸிங்) நிர்வகிக்கப்படுகிறது.

எங்களை நீங்கள் தொடர்புகொள்ளும்போது அல்லது எமது சேவைகளைப் பயன்படுத்தும்போது CYP எப்படி அத்தகவலைப் பயன்படுத்துகிறது மற்றும் உங்களது அந்தரங்கத்தை நாங்கள் எப்படி பாதுகாக்கிறோம் என்பது பற்றி இந்த அந்தரங்கம் பேணல் அறிவிப்பு விளக்குகிறது.

கையாளப்படுகின்ற தனிப்பட்ட தகவலின் கட்டுப்பாட்டாளராக சஃபோக் கவுண்ட்டி கவுன்சில் இருக்கிறது. உங்களது தனிப்பட்ட தரவை CYP எப்படி சேகரிக்கிறது அல்லது பயன்படுத்துகிறது என்பது குறித்து ஏதும் விசாரணைகள், கேள்விகள் உங்களுக்கு இருக்குமானால், கீழ்க்கண்ட முகவரியில் இந்த சர்வீசை நீங்கள் தொடர்புகொள்ளலாம்;

**cyp.dataprotection@suGolk.gov.uk**

**கவுன்சிலிங் வலைதளத்தில் கிடைக்கின்ற, கவுன்சிலிங் கார்ப்பரேட் பிரைவசி நோட்டிஸ்** என்பதில் கவுன்சிலிங் தரவு பாதுகாப்பு அதிகாரி மற்றும் நெறிமுறை இணக்கநிலை மேலாளரது தொடர்பு விவரங்களைக் காணலாம்.

## 2. தனிப்பட்ட தரவு என்பது என்ன?

ஒரு தனிநபராக உங்களை அடையாளப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய, உங்களைப் பற்றிய தகவலை தனிப்பட்ட தரவு உள்ளடக்கும். அதன் எடுத்துக்காட்டுகளில் கீழ்க்கண்டவை உள்ளடங்கும்:

- உங்களது பெயர்
- உங்களது பிறந்த திகதி
- உங்களது தொடர்பு விவரங்கள்
- உங்களது தோற்ற நிழற்படம்

சிறப்பு வகையின தரவு என்பது, அதிக ரகசியமாக பேணப்பட வேண்டிய தனிப்பட்ட தரவின் வகையாக இருக்கிறது மற்றும் அது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்:

- உங்களது உடல்நலம் குறித்து அல்லது நீங்கள் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு சமூக பராமரிப்பு சேவைகள் பற்றிய தகவல்.
- உங்களது அரசியல் நம்பிக்கைகளை அடையாளப்படுத்தக்கூடியவாறு உங்களது இன அல்லது நாடு, பூர்வீகத்தை அடையாளப்படுத்தக்கூடிய தகவல்
- உங்களது தொழிற்சங்க உறுப்பினருக்கான மரபியல் தரவை அடையாளப்படுத்தக்கூடியவாறு உங்களது சமைய அல்லது தத்துவ ரீதியிலான நம்பிக்கைகளை அடையாளப்படுத்துகிற தகவல்
- பயோமெட்ரிக் தரவு (உங்களை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படும்போது, எ.கா. ஆன்லைன் சேவைகளை அணுகிப்பெற விரல் ரேகைகளின் பயன்பாடு), உங்களது பாலியல் வாழ்க்கை அல்லது பாலியல் சார்பு பற்றிய தகவல்.

## 3. நாங்கள் கையாளுகின்ற தனிப்பட்ட தரவின் வகைகள் மற்றும் அது எங்கிருந்து வருகிறது

சேவைகளை வழங்குவதற்காக உங்களிடமிருந்து தனிப்பட்ட தரவை உங்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கிறோம்:

- பெயர்
- மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் உட்பட தொடர்பு விவரங்கள்
- உங்களது பிறந்த திகதி
- உங்களது தொடர்புக்கு பொருத்தமானதென்று நீங்கள் தருகின்ற வேறுபிற தனிப்பட்ட தகவல்

கீழ்க்கண்டவை உட்பட பிற ஆதாரங்களிலிருந்து கீழ்வரும் தகவலை நாங்கள் சேகரிப்பது அவசியமாக இருக்கும்:

உங்களது உடல்நல பதிவுருக்கள்

எளிதில் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய நபர்களது குழுக்களோடு பணியாற்ற உங்களது தகுதிநிலை பற்றிய தகவல் (DBS மற்றும் பொலீஸ் நேஷனல் கம்ப்யூட்டர் (PNC) சரிபார்ப்புகள் மற்றும் உள்ளூர் அதிகார அமைப்பால் இதற்கென குறித்துரைக்கப்பட்ட அதிகாரியுடன் (LADO) சரிபார்ப்புகள்)

கல்விக்கு தொடர்புடைய தகவல்

இனக்குழு, குடும்ப சூழ்நிலைகள், மொழி மற்றும் உடல்நலத் தகவல்

தேசிய பாடத்திட்டம்சார் மதிப்பீடு முடிவுகள்

பள்ளி வருகைப்பதிவு / பள்ளியிலிருந்து விலக்கப்படுதல் குறித்த தகவல்

இளம் நபர்களுக்கான எந்தவொரு சிறப்பு கல்விசார் தேவைகள் மீதான விவரங்கள்

இளம்நபர்கள் / பெற்றோர்கள் / கவனிப்பாளர்களுக்கு தொடர்புடைய மருத்துவ தகவல் - பொருத்தமாக இருக்கின்ற இடத்தில் மட்டும் – எ.கா: சிறப்பு கல்விசார் தேவைகள் அல்லது திறனிழப்பு

உடல்சார்ந்த அல்லது உளவியல் சார்ந்த நலம்

சரியான சேவையை உங்களுக்கு வழங்குவதற்கு அவசியமாக இருக்கின்ற ஏதும் கூடுதல் தனிப்பட்ட தகவல்; சில சூழ்நிலைகளில் குடும்பத்திற்குள் வயதுவந்த நபர்கள் மீது தகவலை நாங்கள் நிறுத்தி வைத்துக்கொள்வது அவசியப்படலாம்.

சில சூழ்நிலைகளில், உங்களுக்கும் மற்றும் உங்கள் குடும்பத்தினருக்கும் முன்பு என்ன சேவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும் நாங்கள் சரிபார்க்கலாம்.

## 4. உங்களது தனிப்பட்ட தரவை நாங்கள் ஏன் கையாளுகிறோம்?

குழந்தைகள் மற்றும் இளநபர்களுக்கான சேவைகள் அமைப்பு கீழ்வரும் சேவைகளை வழங்குகிறது (அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான பட்டியல் அல்ல இது):

**குழந்தைப் பருவத்தின் ஆரம்ப ஆண்டுகள் மற்றும் குழந்தைப் பராமரிப்பு (யேர்லி இயர்ஸ் அண்டு சைல்டுகேர்)**

யேர்லி இயர்ஸ் அண்டு சைல்டுகேர் சர்வீசஸை வழிநடத்துவது, நிர்வகிப்பது மற்றும் முன்னேற்றுவது

ஆரம்ப ஆண்டுகளுக்கான இடங்கள், குழந்தைப் பராமரிப்பிற்கான இடங்கள் மற்றும் பள்ளிக்கான இடங்கள் ஆகியவற்றிற்கு திட்டமிடல், மீள்பார்வை மற்றும் ஏற்பாடு செய்தல்

நிதியுதவியுடன் ஆரம்ப ஆண்டுகள் கல்விக்கு தகுதியுடைய குழந்தைகளை அடையாளம் காணுதல் மற்றும் நிதியுதவி

செய்யப்படும் குழந்தைப் பராமரிப்பிற்கான அவர்களது உரிமைத்தகுதி பற்றி அவர்களது பெற்றோர்களுக்கு தகவலளித்தல்

மற்றும் குழந்தைப் பராமரிப்பை வழங்கும் அனைவருக்கும் ஆரம்ப ஆண்டு கல்விக்கான நிதியுதவித் தொகையை வழங்குதல்

**கல்வி, திறன்கள் மற்றும் கற்றல்**

பள்ளிகளுக்குள் கல்விக்கான வசதிகள்

உயர் தரநிலைகளை ஊக்குவிப்பதற்கு பள்ளிகளுக்கு சேவைகள் – பயிற்சி, பயிற்சியளிப்பு, ஆலோசனை, கண்காணிப்பு

மற்றும் கல்விசார் ஆதரவு சேவைகளின் ஆதரவு கிடைப்பதற்கான வசதியம்சம் ஆகியவை இதில் உட்படும்

கவனிப்பின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு கல்வி கற்றலுக்கான வசதி ஏற்பாடு

உரிமங்கள் (செயல்திறன் உரிமங்கள் போன்றவை), பள்ளியில் சேர்க்கைகள் ஆகியவை குறித்து பள்ளிகளுக்கு தகவலளித்தல்

பள்ளிக்கு போக்குவரத்து

பள்ளியில் வழங்கப்படும் இலவச உணவுகளுக்கான தகுதிநிலை

கரியர்கள் – வேலைவாய்ப்பிற்கான வசதி ஏற்பாடு மற்றும் 16 வயதிற்குப் பிறகு திறன்கள் பெறுவதற்கான வாய்ப்புகள்

**உள்ளடக்க சேவைகள்**

சிறப்பு கல்விசார் தேவைகள் & திறனிழப்புகள் உள்ள குழந்தைகள் மற்றும் இளவயது நபர்களுக்கு உரிய வசதி ஏற்பாடு. EHC தேவைகள் மதிப்பீட்டிற்கு கட்டாயம் செய்யப்பட வேண்டிய கடமைகளை வழங்குதல், வருடாந்திர மீளாய்வுகள் மற்றும் EHC திட்டங்கள், இணை தயாரிப்பு உட்பட உள்ளூர் பகுதியில் பார்ட்னர் அமைப்புகளுடன் முக்கிய உத்தி வாய்ந்த கண்காணிப்பு / மேற்பார்வை.

சேவை வழங்குனர்களின் மற்றும் உள்ளார்ந்த செயல்முறைகளின் தர உத்தரவாதம்

உயர் அளவுகளிலான தேவைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு அல்லது பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய நிலையிலுள்ள குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு சிறப்பு நிபுணர்களது சேவைகள். சிறப்பு கல்விசார் தேவைகள் மற்றும் / அல்லது திறனிழப்புகள் மற்றும் மருத்துவ தேவைகள் உள்ள நபர்களை இது உள்ளடக்கும்.

சஃபோக்கில் குழந்தைகளுக்கு சிறப்பு நிபுணர்களது சேவை வசதியமைப்பை நிறுவி செயல்படுத்துதல் மற்றும் அவர்களின்

ஒப்பந்த மேலாண்மை.

சிறிய இடைவெளி ஆஃபரின் மேலாண்மை.

சஃபோக் முழுவதிலும் உணர்வுசார் நலம், நடத்தை மற்றும் கற்றலுக்காக CYP-க்கு ஆதரவு.

**சோஷியல் கேர் சர்வீசஸ் (சமூகப் பராமரிப்பு சேவைகள்)**

பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய குழந்தைகள், இளவயது நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு சமூகப் பராமரிப்பு

சேவைகளுக்கான வசதி ஏற்பாடு. குழந்தை வளர்ப்பு மற்றும் தத்தெடுப்பு சேவைகள்

பாதுகாப்பளிக்கும் சேவைகள்

எளிதில் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய உயர்அளவிலான தேவைகளை கொண்டிருக்கின்ற குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு சிறப்பு நிபுணர்களின் சேவைகள். சிறப்பு கல்விசார் தேவைகள் மற்றும் / அல்லது திறனிழப்பு சேவைகள்.
குற்றமிழைத்திருக்கின்ற அல்லது குற்றமிழைக்கும் இடர்வாய்ப்பில் இருக்கின்ற அல்லது சமூக விரோத நடத்தையில் தற்போது ஈடுபட்டிருக்கின்ற இளம் நபர்கள்.

வன்முறை / ரௌடி கும்பல்களிலிருந்து ஆபத்திற்கு ஆளாகக்கூடிய இடரிலுள்ள இளம் நபர்களுக்கு சேவைகள் கவனிப்பின்

கீழுள்ள குழந்தைகள் மற்றும் கவனிப்பு சேவையிலிருந்து விலகுபவர்களுக்கு ஆதரவளிக்கின்ற கவுண்ட்டி லைன்ஸ்

செயல்பாடு அல்லது தீவிரமயமாக்கல் / மூலத்தன்மை உடையதாக்குதல் சேவைகள்

பதிவுப் பராமரிப்பு (ரெசிடென்ஷியல் கேர்) வசதி ஏற்பாடு

**மேம்படுத்தப்பட்ட மற்றும் முன்தடுப்பிற்குரிய சேவைகள்**

யுனிவர்சல் (அனைவருக்குமான) சேவைகள்

CHRIS சேவை மற்றும் முக்கிய பணியாளர் சேவைகள், சமூக செவிலியர் சேவை ஆகியவற்றை உள்ளடக்கிய யேர்லி ஹெல்ப்

சர்வீசஸ்

குடும்ப ஆதரவு

கல்வி, வேலைவாய்ப்பு அல்லது பயிற்சியில் இல்லாத (NEET) அல்லது இடர் ஆபத்திலுள்ள இளநபர்களுக்கு வருகை ஆதரவு.

**மேலாண்மை தகவல்**

CYP -ன் திட்டமிடல் மற்றும் செயல்பாடு

CYP -க்கு ஆதரவளிக்கும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் அமைப்புகளை நிர்வகித்தல்,

மக்கள்தொகை கணக்கெடுப்பு, விவரங்கள் மற்றும் முக்கிய நிலை மதிப்பீடுகளின் முடிவுகள் உட்பட, சட்டப்படி கட்டாயமான தரவினை சேகரித்தல், கையாளுதல் மற்றும் நிர்வகித்தல். SENDIASS மற்றும் பாதுகாத்தல் உட்பட வழங்கப்படும் சேவைகளை மேற்பார்வை செய்தல்.

குழந்தைகள் மற்றும் இளம் நபர்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்விற்கு ஆதரவளிக்கும் பிற அமைப்புகளோடு சேர்ந்து பணியாற்றல்; இதைச் செய்வதற்கு நம்மை ஏதுவாக்க சர்வீஸ்களை கமிஷனிங் செய்வது (ஆணையிடுதல்) உட்பட

மேற்கண்ட சேவைகளை வழங்க CYP-ஐ ஏதுவாக்கவும் மற்றும் நாங்கள் பொறுப்பாக இருக்கின்ற குறிப்பிட்ட செயல்பாடுகளை மேற்கொள்வதை உறுதிசெய்ய இளம் நபர்கள் மற்றும் குடும்பங்கள் பற்றிய தகவலை நாங்கள் சேகரிக்கிறோம் மற்றும் பயன்படுத்துகிறோம்; இச்செயல்பாடுகளுள் கீழ்க்கண்டவை உள்ளடங்கும்:

- இளம் நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு பொருத்தமான ஆதரவையும், கவனிப்பையும் வழங்குவது,
- நிதியளிப்பு போன்ற தகவலறிந்த முடிவுகளைச் செய்வதற்கு புள்ளிவிவரங்களை தொகுத்தல்
- சேவைகளுக்கான வசதி ஏற்பாடுகளை செய்தல்
- பள்ளிகளில் கல்விக்கான சேர்க்கைகள்
- பள்ளிகளிலிருந்து விலக்கி வைத்தல்
- குழந்தைகள் நிர்வகிக்கப்படும் பள்ளிகளில் செயல்பாட்டை மதிப்பீடு செய்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல்
- இளம் நபர்கள் மற்றும் குடும்பங்களின் தேவைகளை நமது சேவைகள் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றன என்பதை தணிக்கை செய்தல்
- இலவச பள்ளி உணவுகள் போன்றவற்றிற்கு தேவைப்படுகின்ற நிதியுதவி அளவுகளை மதிப்பிடுதல்
- ஆரம்ப ஆண்டுகளுக்கான நிதியுதவி
- இளம் நபர்களுக்கு பொதுநலம், பாதுகாத்தல், உடல்நலம் மற்றும் நலவாழ்வை ஊக்குவித்தல்

- சில்ட்ரன்ஸ் சர்வீசஸ் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறதென்று மதிப்பிடுதல்
- நிதி மற்றும் தனிநபர் சேவை திட்டமிடலை மதிப்பிடல் மற்றும் மேம்படுத்துதல்
- இனக்குழு அம்சங்கள்  மற்றும் திறனிழப்பைக் கண்காணித்தல்
- உங்களுக்கு சேவைகளையும், ஆதரவையும் வழங்குதல்,
- எமது சேவைகளை நிர்வகித்தல்
- பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்
- எமது சேவைகள் பற்றிய புகார்களை புலன் விசாரணை செய்தல்
- பொது செலவீடுகளை கண்காணித்தல் மற்றும் பாதுகாத்தல்
- சேவைகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சேவைகளை திட்டமிடவும் எங்களுக்கு உதவுதல்
- சுகாதார அமைப்புகள், அரசு துறைகள் மற்றும் நீதிமன்றங்கள் போன்ற பிற அமைப்புகளுக்கு தனிப்பட்ட தகவலை வழங்க எங்களை அவசியமாக்கும் சட்டங்களுக்கு இணக்கமாக செயல்படுதல்

## 5. உங்களது தகவலை கையாள்வதற்கு எமது சட்ட அடிப்படை

### தனிப்பட்ட தரவு

தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், அவ்வாறு செய்வது சட்டப்பூர்வமாக இருந்தால் மட்டுமே குழந்தைகள் மற்றும் இள நபர்களுக்கான சேவைகள் (CYP) உங்களது தனிப்பட்ட தரவை கையாள (புராசஸ் செய்ய) இயலும். தனிப்பட்ட தரவின் வெவ்வேறு வகைகளை சட்டப்பூர்வ அடிப்படைகளின் விவரங்களை தயவுசெய்து கீழே காண்க.

தனிப்பட்ட தரவைக் கையாள்வதற்கு கீழ்க்கண்ட சட்டப்பூர்வ அடிப்படைகளை நாங்கள் சார்ந்திருக்கிறோம்:

UK GDPR சரத்து 6(1)(e) – பொதுநலனை (பொதுகடமை) சார்ந்திருக்க ஒரு கடமையை செய்வதற்கு எங்களுக்கு அவசியமாக புராசஸிங் (கையாளல்) இருக்கிறபோது.

### சிறப்பு வகையின தரவு

சிறப்பு வகையின தரவை நாங்கள் கையாள்கிறபோது, பின்வரும் கூடுதல் சட்டப்பூர்வ அடிப்படைகளை நாங்கள் சார்ந்திருக்கிறோம்: (பொருந்தாத அனைத்தையும் நீக்கிவிடவும்)

UK GDPR சரத்து 9(2)(b) – வேலைவாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக காப்பு (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 1, DPA 2018)

தொடர்பாக குறிப்பிட்ட கடப்பாடுகளை மேற்கொள்வது அல்லது உரிமைகளை விளைவிப்பதற்கு CYP -க்கு கையாளல் அவசியமாக இருக்கிறபோது.

UK GDPR சரத்து 9(2)(f) – சட்ட உரிமைக்கோரிக்கைகளை நிறுவ, தீர்மானிக்க, மேற்கொள்ள அல்லது பாதுகாக்க கையாளல் அவசியமாக இருக்கிறபோது.

UK GDPR சரத்து 9(2)(g) –கணிசமான அளவு பொதுநலன் காரணங்களுக்காக கையாளல் அவசியமாக இருக்கிறபோது; குறிப்பாக:

- சட்டப்படி கட்டாயமான மற்றும் அரசு நோக்கங்களுக்காக (அட்டவணை 1, Part 2, பிரிவு 6, DPA 2018)
- சமவாய்ப்புகள் மற்றும் சமமாக நடத்தப்படுவதை கண்காணிப்பதற்கு (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 8, DPA 2018) – தரவு வகையினம் தொடர்பாக மக்கள் குழுக்களுக்கு வாய்ப்பு அல்லது நடத்தப்படுதல் சமத்துவ நிலையை ஏதுவாக்க குறிப்பிட்ட சிறப்பு வகையின தரவு கையாளப்படுகிறபோது மட்டுமே இது பொருந்தும். (ஆரோக்கியம், பாலியல் சார்பு மற்றும் சமய மற்றும் தத்துவ ரீதியிலான நம்பிக்கைகள்)
- சட்டத்திற்கு எதிரான செயல்பாடுகள் நிகழாமல் தடுப்பதற்கு அல்லது கண்டறிவதற்கு (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 10, DPA 2018)
- மோசடியை தடுப்பதற்காகவும் (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 14, DPA 2018)மற்றும் நேர்மையற்ற தன்மைக்கு எதிராக பொதுமக்களை பாதுகாக்கவும் (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 11, DPA 2018)
- குழந்தைகளையும் மற்றும் ஆபத்திலுள்ள தனிநபர்களையும் பாதுகாப்பதற்காக (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 18, DPA 2018)

UK GDPR சரத்து 9(2)(h) – சுகாதாரம் மற்றும் / அல்லது சமூகப் பராமரிப்பு நோக்கங்களுக்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 2, DPA 2018)

UK GDPR சரத்து 9(2)(j) – பொதுநலன் சார்ந்ததாக, ஆவணப் பாதுகாப்பு, ஆராய்ச்சி அல்லது புள்ளியியல் தரவு நோக்கங்களுக்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 4, DPA 2018)

**குற்றச்செயல் தரவு – பொது புராசஸிங் (கையாளல்)**

கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கக்கூடிய குற்றச்செயல் தரவுகளையும் CYP கையாள்கிறது:

எந்தவொரு குற்றச்செயல் பதிவுருக்கள் அல்லது குற்றச்செயல் வரலாறு, நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகள் உட்பட, குற்ற

நடத்தை குறித்த புகார்கள் பற்றிய தகவல்

குற்றத்தீர்ப்புகள் இல்லாமை, எடுத்துக்காட்டாக பாதிக்கப்பட்ட நபர்களின் மற்றும் / அல்லது சாட்சிகளின் தனிப்பட்ட தரவுகள்

மீது DBS சோதனைகள் அல்லது பொலீஸ் நேஷனல் கம்ப்யூட்டர் பரிசோதனைகளின் முடிவுகள்,

வழங்கப்பட்டிருக்கக்கூடிய குற்றச்செயல்களுக்கான தண்டனைகள் / அபராதங்கள் பற்றிய தனிப்பட்ட தரவு

மேலே தனிப்பட்ட தரவுகள் என்பதன் கீழ், நாங்கள் அடையாளம் கண்டிருக்கின்ற சட்டப்பூர்வ ஆதாரங்களுக்கும் கூடுதலாக, DPA 2018 – ன் அட்டவணை 1-ன் கீழ்வரும் நிபந்தனைகளின் கீழ் குற்றச்செயல் தரவை நாங்கள் கையாளுகிறோம் / புராசஸ்

செய்கிறோம்:

- பணி வாய்ப்பு சமூக பாதுகாப்பு மற்றும் சமூகக்காப்பு தொடர்பான குறிப்பிட்ட கடப்பாடுகளை மேற்கொள்ள அல்லது உரிமைகளை செயல்படுத்த தரவு கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 1, DPA 2018)
- சுகாதார வசதி மற்றும் / அல்லது சமூகப் பராமரிப்பு நோக்கங்களுக்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 2, DPA 2018)
- பொதுநலன் சார்ந்ததாக, ஆவணப் பாதுகாப்பு, ஆராய்ச்சி அல்லது புள்ளியியல் தரவு நோக்கங்களுக்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 1, பிரிவு 4, DPA 2018)
- சட்டப்படி கட்டாயமான மற்றும் அரசு நோக்கங்களுக்காக தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, Part 2, பிரிவு 6, DPA 2018)
- சட்டத்திற்கு எதிரான செயல்பாடுகள் மற்றும் நேர்மறையற்ற தன்மை தொடர்பான ஒழுங்குமுறை தேவைப்பாடுகளுக்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 12, DPA 2018)
- மோசடியை தடுப்பதற்கு தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 14, DPA 2018)
- ஆலோசனை வழங்கலுக்கான ஏற்பாட்டு வசதிக்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 17, DPA 2018)
- குழந்தைகளையும் மற்றும் ஆபத்திலுள்ள தனிநபர்களையும் பாதுகாப்பதற்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 18, DPA 2018)
- தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு தகவலை வெளிப்படுத்துவதற்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 1, பகுதி 2, பிரிவு 24, DPA 2018) – அவர்களது வேண்டுகோளின்பேரில் மற்றும் தொகுதியைச் சேர்ந்த ஒரு நபரின் சார்பாக அவர்கள் செயல்படுகிறபோது, கவுன்சிலர்களிடம் தகவல் பகிர்ந்துகொள்ளப்படும்போது
- சட்ட ரீதியான உரிமைக்கோரிக்கைகளுக்கு  தரவு கையாளல் அவசியமாக இருக்கிறபோது (அட்டவணை 1, பகுதி 3, பிரிவு 33, DPA 2018)

**சட்ட அமலாக்க நோக்கங்கள்**

DPA 2018-ன் பகுதி-3-ன் நோக்கங்களுக்கு தகுதித்திறன் கொண்ட அதிகார அமைப்பாக CYP இருக்கிறது மற்றும் குற்றச்செயல்களை தடுக்க, விசாரிக்க மற்றும் அவர்கள் மீது குற்றவழக்கு தொடுக்க அல்லது குற்றத்திற்கான தண்டனைகள் / அபராதங்களை விதிக்க வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட தரவை நாங்கள் கையாளுகிறோம்.

தனிப்பட்ட தரவு கையாளப்படுவதற்கு சட்ட அடிப்படை முகாந்திரம் இருக்கும்போது: சட்ட அமலாக்க நோக்கங்களுக்காக ஒரு செயலை செய்ய எங்களை ஏதுவாக்குவதற்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது, சட்ட செயலாக்க நோக்கங்களுக்காக தனிப்பட்ட தரவை நாங்கள் கையாளலாம் என்பதே இதன் அர்த்தமாகும்.

மேற்கண்டதற்கும் கூடுதலாக, சட்ட செயலாக்க நோக்கங்களுக்கு கீழ்க்கண்ட நிலைகளில், உணர்திறன் கொண்ட முக்கிய தரவுக் கையாளலை நாங்கள் மேற்கொள்கிறோம்:

- தரவுக் கையாளல் கண்டிப்பாக அவசியப்படும்போது மற்றும் வேறு பிற வழிமுறையில் அதை அடைய இயலாதபோது மற்றும் 2018 DPA – ன் அட்டவணை 8 – ன் நிபந்தனைகளை அது பூர்த்தி செய்யும்போது (பொருந்தாதவற்றை நீக்கிவிடவும்)
- சட்டப்படி கட்டாய நோக்கங்களுக்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 8, பிரிவு 1, DPA 2018)
- சட்டப்பூர்வ உரிமைக்கோரிக்கைகளை தீர்மானிக்க, மேற்கொள்ள அல்லது அவற்றை ஆதரிக்க / தற்காக்க தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 8, பிரிவு 6, DPA 2018)
- மோசடியை தடுப்பதற்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 8, பிரிவு 8, DPA 2018)
- ஆவணப் பாதுகாப்பு, ஆராய்ச்சி அல்லது புள்ளிவிவர அறிவியல் நோக்கங்களுக்கு தரவுக் கையாளல் அவசியமாக இருக்கும்போது (அட்டவணை 8, பிரிவு 9, DPA 2018)

## 6. உங்களது தகவலைப் பகிர்ந்துகொள்வது

சரியான சேவையை உங்களுக்கு வழங்குவதற்கு தகவல் தருமாறு பிற நிறுவனங்களால் கோரப்படும் சூழ்நிலைகளில் தகவல்பெறும் கீழ்வரும் நபர்களோடு CYP சேவைகள் தகவலைப் பகிர்ந்துகொள்கிறது:

2013 கல்வி ஒழுங்கு விதிகளின் கீழ், சட்டமுறை அடிப்படையில் கல்வித்துறை (DfE), NHS (எ.கா.GPs), சுகாதார அமைப்புகள், பொலீஸ் போன்ற பொது முகமைகள்

HM நீதிமன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு சேவைகள் (HMCTS)

ஹோம் ஆஃபிஸ் மற்றும் பணி மற்றும் பென்ஷன் சேவைகளுக்கான துறை ஆகியவற்றை நாங்கள் கமிஷன் செய்யும்போது (சுகாதாரம், பராமரிப்பு மற்றும் சிறப்பு நிபுணர்கள் சேவைகள் போன்றவை)

கல்வி வழங்குனர்கள் (பராமரிக்கப்படும் பள்ளிகள், அகாடமிகள் மற்றும் இலவச பள்ளிகள் போன்றவை)

இளம் நபர்கள் தீவிரவாத செயல்பாட்டில் ஈடுபடாமல் தடுக்க முற்படும் நிறுவனங்கள் (சேனல் மற்றும் பிரீவென்ட் போன்றவை)

பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு நோக்கங்களுக்காக மூன்றாம் தரப்பு (தன்னார்வ நிறுவனம் அல்லது பொலீஸ்) அமைப்பிடமிருந்து பெறப்பட்ட தகவல்; குற்றம் சார்ந்த பாலியல் சுரண்டல் / தொந்தரவு (CSE) தொடர்பாக இடர்வாய்ப்புகள் இருப்பது பற்றிய தகவல்

குற்றச்செயலை தடுப்பதற்கு முற்படுகின்ற அமைப்புகள் (பொலீஸ் மற்றும் நேஷனல் கிரைம் ஏஜென்சி போன்றவை)

தி சில்ட்ரன் அண்டு ஃபேமிலி கோர்ட் அட்வைசரி மற்றும் ஆதரவு சேவை (CAFCASS)

கவனிப்பை விட்டு விலகிய ஒரு நபரை அவர்களுடன் தங்க அமர்த்துகிறபோது 16+ தங்குமிடங்களுக்கு அந்த அமைவிட வசதிகளை வழங்கியவர்களோடு பகிர்ந்து கொள்ளப்பட்ட தகவல்; குழந்தைகளை கவனிப்பு / பராமரிப்பு ஏற்பாட்டின் கீழ் வைக்கும்போது குடியிருப்பு பராமரிப்பு சேவை வழங்குனர்களோடு பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்

## 7. வேறொரு நாட்டிற்கு உங்களது தகவலை அனுப்புவதற்கான எண்ணம் எங்களுக்கு இருக்கிறதா

யுகே – ல் இருக்கும் தரவு பாதுகாப்பிற்கு சம அளவிலான பாதுகாப்பை கொண்டிராத வேறு பிற நாட்டிற்கு அல்லது ஐரோப்பிய ஒன்றியம் அல்லது EEA (ஐரோப்பிய பொருளாதார பகுதி) -க்கு வெளியே உள்ள சர்வதேச அமைப்புகளுக்கு அல்லது வேறு பிற நாடுகளுக்கு எந்த தனிப்பட்ட தரவையும் நாங்கள் அனுப்புவதில்லை.

## 8. உங்களது தகவலை எவ்வளவு காலம் நாங்கள் வைத்திருப்போம்?

தனது சட்டப்பூர்வ பொறுப்புகளை மேற்கொள்வதற்கு CYP தேவைப்படுகின்ற குறைந்தபட்ச காலஅளவிற்கு மட்டுமே தரவு அதனால் பராமரிக்கப்படும். இந்த தக்கவைப்பு காலஅளவுகள் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறபோது, அந்த தக்கவைப்பு காலஅளவு முடிவடையும்போது தரவானது மீள்பார்வை செய்யப்படும் மற்றும் கீழ்வரும் விளைவுகளுள் ஒன்றிற்கு அது வழிவகுக்கும்:

- பாதுகாப்பான முறையில் தரவு அழிக்கப்படுதல் – இனிமேலும் தரவு தேவைப்படாது
- மீளாய்வு / பராமரிப்பு – ஒரு மேலதிக காலஅளவிற்கு தரவு தேவைப்படுகிறது மற்றும் இந்த காலஅளவு ஆவணப்படுத்தப்படுகிறது
- ஆவண காப்பு – ஆவணக்காப்பு செய்தல், ஆராய்ச்சி அல்லது வரலாற்று நோக்கங்களுக்காக சஃபோக் ஆர்க்வ் ஆல் அனைத்து அல்லது சில தரவுகள் தக்கவைக்கப்படலாம்

இந்த தக்கவைப்புக் காலங்கள் தேசிய அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட தரநிலைகளைப் பின்பற்றும். ஆனால், சட்டத்தின்கீழ் கடப்பாடுகளை கவுன்சில் பின்பற்றுவதற்கு ஏதுவாக உள்ளூர் அளவில் சில தக்கவைப்பு காலஅளவுகள்

திருத்தப்பட்டிருக்கின்றன. தக்கவைப்புக் காலம் குறித்த மேலதிக தகவலை cyp.dataprotection@suGolk.gov.uk – ல் தொடர்பு கொள்வதன் மூலம் பெறலாம்.

## 9. தானியக்க முறையில் முடிவு செய்தல் மற்றும் வாழ்க்கைக் குறிப்பு (புரொஃபைலிங்) விவரப் பதிவுகள்

உங்களது தகவல் தொடர்பாக தானியக்க முறையிலான முடிவு செய்தல் செயல்முறைகளை அல்லது வாழ்க்கைக்குறிப்பு விவரப் பதிவுகளை CYP பயன்படுத்துவதில்லை.

## 10. தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உங்களது உரிமைகள்

தரவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ், உங்களைப் பற்றி நாங்கள் வைத்திருக்கின்ற தகவலை அணுகிப்பெற வேண்டுகோள் வைக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. உங்களது தனிப்பட்ட தகவலை அணுகிப்பெற ஒரு வேண்டுகோளை செய்ய நீங்கள் விரும்பினால், data.protection@suGolk.gov.uk. – ஐ தயவுசெய்து தொடர்புகொள்க.

உங்களது தனிப்பட்ட தரவு குறித்து பிற உரிமைகளும் உங்களுக்கு இருக்கின்றன. **கவுன்சிலின் கார்ப்பரேட் அந்தரங்க காப்பு அறிவிப்பை பார்வையிடுவதன் மூலம் இந்த உரிமைகள் பற்றி அறிய தகவலை நீங்கள் கண்டறியலாம்.**

## 11. தனிப்பட்ட, சுதந்திரமான ஆலோசனைக்கான உங்கள் உரிமை

அந்தரங்க காப்பு அறிவிப்பு மீது அல்லது ஒரு புகாரை எப்படி செய்வது என்பது உட்பட, உங்களது தனிப்பட்ட தரவை சஃபோக் கவுண்ட்டி கவுன்சில் எப்படி கையாள்கிறது என்பது பற்றிய பிற விஷயங்கள் மீது சுதந்திரமான ஆலோசனையைப் பெற நீங்கள் விரும்பினால், கீழ்க்கண்ட முகவரியிலுள்ள தகவல் ஆணையரது அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:

இன்ஃபர்மேஷன் கமிஷனர்:
**WycliGe House, Water Lane, Wilmslow, Cheshire, SK9 5AF**

தொலைபேசி: **0303 123 1113**

மின்னஞ்சல்: **casework@ico.org.uk**